DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -129/2025

Prosecution PW -2

| Name | திரு.வி.வேலுமணி | Occupation |
|---|---|---|
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 09.03.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused present.

முதல் விசாரணை

நான் தற்பொழுது நெல்லிக்குப்பம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.06.2025ம் தேதி நான் பண்ருட்டி காவல் நிலைய ஆய்வாளராக பணியிலிருந்தபோது, பண்ருட்டி காவல்நிலைய உதவி ஆய்வாளராக பணியிலிருந்த தவமணி என்பவர் குற்ற எண்.795/2010 பிரிவு 20 (i) (b) of NDPS Actன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் விசாரணை செய்து வைத்திருந்த வழக்கை நான் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுரேஷ், ராஜா முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் அதசாஆ**.4.** மாதிரி வரைபடம் அதசாஆ**.5.** பின்னர் இவ்வழக்கின் கைப்பற்றப்பட்ட மாதிரி தடயத்தை பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கிய விழுப்புரம் வட்டார தடய அறிவியல்அலுவலர் ரோஸ்மணி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பகுப்பாய்வு அறிக்கை பெற்றேன். பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ.6. பின்னர் வழக்காவணங்களை பார்வையிட்டு இவ்வழக்கின் சட்டப்பிரிவு பிரிவு 20 (i) (b) of NDPS Act இருந்து பிரிவு 8(c), 20(b)(ii)(B) of NDPS Act ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்று அறிக்கை சமர்பித்தேன். பிரிவு மாற்று அறிக்கை சமர்பித்தேன். பிரிவு மாற்று அறிக்கை அதசாஆ**.7.** இத்துடன் என் விசாரணையை முடித்து எதிரியின் மீது பிரிவு பிரிவு 8(c), 20(b)(ii)(B) of NDPS Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள

சான்றுபொருள் பிரிவு 52(A)NDPS Act ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. அதன் புகைப்படம் அதசாஆ **8**.

<u>குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்</u>

சம்பவம் 2010 ம் வருடம் நடைபெற்று என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தை 30.06.2025ம் தேதி பார்வையிட்டேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்வில்லை என்றாலும், சம்பவ இடத்தில் எந்த ஆவணங்களையும் தயாரிக்கவில்லை என்றாலும, அனைத்து ஆவண்ஙகளையும் காவல் நிலையத்தில் தயார் செய்து உதவி ஆய்வாளர் பதிவு செய்த வழக்கிற்கேற்றாற் போல் தற்பொழுது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும, நான் சரியாக புலன்விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்